164

164

பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம்.

இப்புத்தகத்தில்

காயற்பட்டணம்

ஷெய்கப்துல் காதிர் நயினார்.

லெப்பை ஆலிம் புலவரவர்கள் பாடிய

சொர்க்க நீதி.

கீழக்கரை

அப்துல் காதிறுப் புலவர் பாடிய

அடைக்கல மாலை.

காலங்குடியிருப்பு

மரைக்காயப் புலவர் பாடிய

எண்ணெய்ச் சிந்து.

இம்மூன்றுமடங்கி யிருக்கின்றன.

இவை

முன்பதிப்பித்த பிரதிக்கிணங்க

மேலப்பாளையம்

காலை ஹஸன் அலிப்புலவர்

அவர்களாற் பார்வையிடப்பட்டு,

சென்னை, திருவல்லிக்கேணி,

ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்,

அவர்களால்

தங்களது

ஷாஹுல் ஹமீதிய்யா அச்சியந்திர சாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

சுத்தப் பதிப்பு.

1948 [அணா 3.

OFFICE OF THE ... MADRAS 14 JUL 1948

Q7:417
.N48
67

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

இப்புத்தகத்தில்

காயற்பட்டணம்

ஷெய்கப்துல் காதிர் நயினார்

லெப்பை ஆலீம் புலவரவர்கள் பாடிய

சொர்க்க நீதி.

கீழக்கரை

அப்தில் காதிறுப் புலவர் பாடிய

அடைக்கல மாலை.

காலங்குடியிருப்பு

மரைக்காயப் புலவர் பாடிய

எண்ணெய்ச் சிந்து.

இம்மூன்றுமடங்கி யிருக்கின்றன.

இஃது

முன்பதிப்பித்த பிரதிக்கிணங்க

மேலப்பாளையம்

காளை ஹஸன் அலிப்புலவர்

அவர்களாற் பார்வையிடப்பட்டு,

சென்னை, திருவல்லிக்கேணி,

ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்,

அவர்களால்

தங்களது

ஷாஹுல் ஹமீதிய்யா அச்சியந்திர சாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

சுத்தப் பதிப்பு.

இதன் விலை] 1948 [அணா 3.

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

சொர்க்க நீதி.

காப்பு விருத்தம்.

சீரது வளருநாளும் தீவினையகலுநன்மை
நேரது பாவும்வென்றி நிலைவளம் பெருகும்வல்லோன்
பாரது வளருமெய்மைப் பலன்றருங் கருணையெய்தும்
வாரமே சொர்க்கநீதி வண்மையிற் படிப்போர்க் கன்றே.

தொங்கல்.

அரியதொரு வல்லவனை வணங்கவேண்டும்—அவனருளும் பணிவிடைக ளெடுக்கவேண்டும், பெருமைதரு மிறசூலைப் போற்ற வேண்டும்—பெருகுநபி மார்கடம்மைத் துதிக்கவேண்டும், தெரியு மறையோர்கள் சொல்லை மதிக்கவேண்டுஞ்—சிறப்புடையார் திருப் பாதம் புகழவேண்டும்; வரிசைபெறுங் கதிசார் தம் மெய்ம்மைநாதா—மணிமுத்தின் மஹ்மூதை வாழ்த்தாய் நெஞ்சே. 1

அஞ்சொருத்தும் தப்பாமற் ரெழுகவேண்டும்—அதற்கிடை யினபிற்றொழுகை யெடுக்கவேண்டும்; வஞ்சமறப் பெருநோன்பு பிடிக்கவேண்டும், வரிசைபெறும் வெள்ளிதிங்கள் முழிக்கவேண்டும், தஞ்சமெனப் பெரியோர்சொல் லெடுக்கவேண்டும்—தப்பாமல் திக்கிர் வழக்கஞ் செய்யவேண்டும்; மஞ்சணியுங் குழல்கதிஜா வரிசைநாதர்—மணிமுத்தின் மஹ்மூதை வாழ்த்தாய் நெஞ்சே 2

செயலதனிற் பழுதில்லாரா தியற்றவேண்டும்—தினம் தினமும் பாவ நினைத்தழுகவேண்டும், பயமனதில்லைத்தொ துங்கி நடக்க வேண்டும் பாசிக்கா னவர்வாழ்க்கை யிகழவேண்டும், நயமுடைய வார்த்தையொடு மிருக்க வேண்டும்—நகைமுகமாயுள்ளச்சம் பிறக்க வேண்டும்; மயமுலவும் குறைஷிகுலக்கதீஜாபாங்கர்—மணிமுத்தின் மஹ்மூதை வாழ்த்தாய் நெஞ்சே. 3

வல்லவன்றன்னேவ லெல்லாமெடுக்கவேண்டும்—வரிசைபெற மனதொத்துநடக்கவேண்டும், அல்லலுறும் விலகலிதென்றறிய வேண்டும் அதனையெடுக் காதவரோடிருக்கவேண்டும், புல்லியதோர் மிதம் தவுபாச் செய்யவேண்டும்—பொசிந்த குபிரியல்லைமயிகழ

வேண்டும், மல்லிகைப்பூங்குழல் கதிஜாமணாளரான—மணிமுத்தின்
மஹ்மூதை வாழ்த்தாய் நெஞ்சே. 4

நேர்மைதரும் வாணிபங்கள் செய்யவேண்டும் நிலையதனிற்பிச
காமனிற்கவேண்டும், சீர்மைதருமினத்தாருக் குதவவேண்டுஞ்—
சிறப்புடனே சக்காத்தொழிக்கா திருக்கவேண்டும், ஓர்மைதரும்வழி
நோக்கி நடக்கவேண்டும்—உற்றோர்க்கும் பெற்றோர்க்கு மொழுக
வேண்டும், மாரியெனுங் குழல்கதிஜா மணாளரான—மணிமுத்தின்
மஹ்மூதை வாழ்த்தாய் நெஞ்சே. 5

பெரியோரைப் பின்சென்று நடக்கவேண்டும்—பேணவரு
மவர்சொற்கள் படிக்கவேண்டும்; உரியநயந்தருங்கருமமெடுக்க
வேண்டும், ஒருவரையு நகைக்காமலிருக்கவேண்டும், அரிய
வசலாரைவிசா ரிக்கவேண்டும்—அவர்கள் செயுங்குற்றமெல்லாம்
பொறுக்கவேண்டும், மருவியமைத்துனிசயி னபுயிர்மணாளர்—மணி
முத்தின் மஹ்மூதை வாழ்த்தாய் நெஞ்சே. 6

சிறுவர்வஞ்சச்செயல்தனையும் பேணவேண்டும்—தீயநஞ்சனு
வினையுங் காக்கவேண்டும், வெறிதானவொசுவாசை நீக்கவேண்டும்-
வீண்பேச்சுமுதலான தகற்ற வேண்டும், பறுலானபீசபீல்துணிவு
வேண்டும்—பதிவாகத்தகுவாவுள் ளிருக்கவேண்டும்; மறுவற்ற
மதிமுகத்தின் கதிஜாகாந்தர் மணிமுத்தின் மஹ்மூதை வாழ்த்தாய்
நெஞ்சே. 7

திருந்துஹலா லுணவு நிதமுண்ணவேண்டுஞ் செறியும்ஹலா
லுடைமான முடுக்கவேண்டும், பொருந்துமமல்நினைவோடு செய்ய
வேண்டும்—புனிதமுறத் தஸ்பீஹு புரியவேண்டும், அருந்தும்
பொருள்பசித்தாருக்குதவவேண்டும்—அருளிரக்க மெவரிடத்தும்
வைக்கவேண்டும், மருந்தும் பகுந்துண்ணும் கதிஜாமணாளர்—மணி
முத்தின் மஹ்மூதை வாழ்த்தாய் நெஞ்சே. 8

தாய்தகப்பன் சொல்லதனைப் பேணவேண்டும்-தாழ்ச்சியொடு
முபகாரஞ்செய்யவேண்டும் நோய்பிடித்தோரிடஞ்சென்று நடக்க
வேண்டும் நொய்யசொல்லை நினைக்காமல் மறக்கவேண்டும், காய்
சினத்தைவாராமற்காக்கவேண்டும்—கண்கொண்டு வேகாமல்நோக்க
வேண்டும், வாய்திவளைமதுரமொழி கதிஜாபாங்கர்—மணிமுத்தின்
மஹ்மூதை வாழ்த்தாய் நெஞ்சே. 9

கண்ணோட்டம்பாராமற் கொடுக்கவேண்டும்கைம்மாறுதேடாம
லிருக்கவேண்டும், எண்ணோட்டஞ் செய்யாமற் றுதிக்கவேண்டும்.
இளைத்தாரைக் கைகள்விடா தெடுக்கவேண்டும்; பண்ணோட்ட
மறைமொழிகள் விளக்கவேண்டும்-பவகாரிக்கு மதிகள் சொல்ல
வேண்டும், மண்ணாட்டு விண்ணாட்டு கதிஜாபாங்கர்-மணிமுத்தின்
மஹ்மூதை வாழ்த்தாய் நெஞ்சே. 10

வஞ்சகத்தின் செயலணவு மெடுக்க வேண்டாம்-வாய்மை
கொடுத்தறுதியினை மாறவேண்டாம், நெஞ்சிடத்திற் கசடுகளை
வைக்கவேண்டாம்-நேர்மையில்லா மூடருட னிணங்கவேண்டாம்,
நஞ்சினங்கள்யாதொன்று நினைக்கவேண்டாம்-நாமென்னுமதவார்த்
தைபறையவேண்டாம், மஞ்சனைய குழல் கதீஜாமணாளரான-மணி
முத்தின் மஹ்மூதை வாழ்த்தாய் நெஞ்சே. 11

பாதகத்தின் செயல்கடம்மை யெடுக்கவேண்டாம்-பசித்தாரு
மருகிருக்க வுண்ணவேண்டாம், தோதகத்தின் மடவாரை நம்ப
வேண்டாம், தோஷிகளினுடன்கூடி நடக்கவேண்டாம்; பாதகத்
தின் கொலைமன தினினைக்க வேண்டாம்-களவு செயும் திருடருட
னிணங்க வேண்டாம், மாதவத்தின் மயிலனைய கதிஜாபாங்கர்-
மணிமுத்தின் மஹ்மூதை வாழ்த்தாய் நெஞ்சே. 12

உடன்மயக்கும் பொருளனைத்துமெடுக்கவேண்டா, மூறவாளர்
செய்த குற்றம் நினைக்கவேண்டாம், கடன்கொடுத்தார் மேற்
காய்ந்து வெகுள வேண்டாம், கருத்துடையார் கோவங்கொள்ள
நடக்க வேண்டாம், அடவுடைமைக் கழிவு சொற்கள் சொல்ல
வேண்டா-மாங்காரச் செயலெடுத்து நடக்கவேண்டாம், மடல்
விரியு மலர்க்குழலார் கதிஜாபாங்கர்-மணிமுத்தின் மஹ்மூதை
வாழ்த்தாய் நெஞ்சே. 13

அஞ்சாம லுடலுயிரைவதைக்கவேண்டா மடுத்தாருக்கிடும்பு
சொல்லிக்கெடுக்கவேண்டாம், அஞ்சாதகாரியத்தை விரும்ப வேண்
டாம், துணையாரை வஞ்சித்து மறிக்கவேண்டாம், நெஞ்சார
சூதாடித் திரியவேண்டாம், கோரதகாரியத்தை நினைக்கவேண்டாம்,
மஞ்சாருங் குழல்ஹபஷாவுயிர்மணாளர் மணிமுத்தின் மஹ்மூதை
வாழ்த்தாய் நெஞ்சே. 14

வாதாடிவலியவழக் கெடுக்கவேண்டாம், வழக்கோரஞ் சொல்
வாரை யடுக்கவேண்டாம், கோதாடியவுரைனைப் பிரளிவேண்டாம்,

குடிகெடுத்த படிறுசொல்லி யடுக்கவேண்டாம், வேதாளத்தொடர் வினைகள் செய்ய வேண்டாம், வேடிக்கைப் பிலுக்கர்தம்மை மதிக்க வேண்டாம், மாதரசி ஆயிஷாவுயிர்மணாளர் மணிமுத்தின் மஹ்றமூதை வாழ்த்தாய் நெஞ்சே. 15

மதியுல்கு பெருவானம் படைத்த வல்லோன், மகிமையுண ரபூபக்கரி லப்பை தோன்றல், நிதியுலவுகாதிறு முஹியித்தீன்றன் நிதித்துணை வன்பக்கீறுசாகிபுள்ளம், கதிகொளவே யுரைத்த சொர்க்க நீதி தன்னைக் கருத்துடனே யனைவருடன் படிக்க வேண்டும், மதியுறையுந் திருமயிலின் கதிஜாபாங்கர் மணிமுத்தின் மஹ்றமூதை வாழ்த்தாய் நெஞ்சே. 16

முகத்திச்சை யொருக்காலுஞ் சொல்ல. வேண்டாம், முனுபிக்கானவர் குணங்களெடுக்க வேண்டாம், நகைத்தெளியோர் மனங்கோண நடக்கவேண்டாம், நாற்றமுள்ள துர்குணங்க ளெடுக்க வேண்டாம், பகைத்தவர் தம்பகை யெண்ணிப்பார்க்க வேண்டாம், பண்புடனே சிரித்து கழுத்தறுக்க வேண்டாம், மகத்துவத்தின் குறைஷிகுலத்த பஷாபாங்கர் மணிமுத்தின் மஹ்றமூதை வாழ்த்தாய் நெஞ்சே. 17

காமமெனு நோய்கொண்டு திரியவேண்டாம், கலங்காமலாண்மை யிறுமாப்பு வேண்டாம், ஈரமநிலைபுரியா ரோலிணங்க வேண்டா, மிரப்போர்க்குக் கொடுப்பாரைக் கெடுக்க வேண்டாம், சாம மதில் வீண்பேச்சிலிருக்க வேண்டாம் தன்னை மதியாதவரோடிணங்க வேண்டாம், மாமயிலி னெழில் குலவும் கதிஜாபாங்கர் மணிமுத்தின் மஹ்றமூதை வாழ்த்தாய் நெஞ்சே. 18

பிறருடைமை யெள்ளினுக்கும் வேட்கை வேண்டாம், பிறருடைய மனங்கோண நடக்கவேண்டாம், மறநிலையின் பணங்காசு தேடவேண்டாம், மறநிலையின் வட்டுகவுராடவேண்டாம், புறநிலையின் மடவியருக் கிச்சைவேண்டாம், புறநிலையின் வார்த்தைகளைச் சொல்ல வேண்டாம், வறநிலைகள் நீக்குமயில் கதிஜாபாங்கர் மணிமுத்தின் மஹ்றமூதை வாழ்த்தாய் நெஞ்சே: 19

வாதாடுந் துஷ்டருடனிணங்க வேண்டா, மனப்பிரமை கொண்டு டலையலைக்க வேண்டாம், சூதாடித்திரிவாரை நம்பவேண்டாம் தோகையர்கள்சொல்லதனை யெண்ணவேண்டாம் பேதமுள்ள வழி கொண்டு மயங்கவேண்டாம், பெருமையொடு மதம் பேசித்

திரியவேண்டாம், மாதரசி வரிசைபெறு கதிஜாபாங்கர் மணிமுத்தின் மஹ்மூதை வாழ்த்தாய் நெஞ்சே. 20

உலகுடையபொருளனைத்து நம்பவேண்டாம், மூற்றுரைச்சதி செய்ய நினைக்கவேண்டாம், மலைவுதருமவ கேடுகருதவேண்டாம், மாதவத்தோர்கற்பனையை யிகழவேண்டாம், நிலையழிவுசெய்வாரை மதிக்கவேண்டாம், நெஞ்சிடத்திலுபாயமிட்டு நகைக்கவேண்டாம் மலைவிளக்குப்போல்வந்த கதிஜாபாங்கர் மணிமுத்தின் மஹ்மூதை வாழ்த்தாய்நெஞ்சே. 21

ஆயுதம் கையெடுத்து யிருக்கஞ்சவேண்டா, மடையலரைக் கண்டுபுறம்காட்ட வேண்டாம், மாயமுள்ள வித்தைகளை மதிக்க வேண்டாம், மார்க்கமுறிவுள்கரும நினைக்க வேண்டாம், நோயினரை யருவருத்து நகைக்க வேண்டாம், நூலதனிற்றவறு சொல்லித்திரிய வேண்டாம், வாயழகுகுடிகொண்ட கதிஜாபாங்கர் மணிமுத்தின் மஹ்மூதை வாழ்த்தாய் நெஞ்சே. 22

உணவு தனிற்பணிக்கிமிகச் சொல்லவேண்டா, முறுபொருளைத் தனதென்று நம்பவேண்டாம், பணையம்வைத்த வெளியோரைச்சதிக்கவேண்டாம், பாக்கியதைக் கண்டு மனமதிப்பு வேண்டாம், குணமிகுந்த வறிஞோரை யெதிர்க்கவேண்டாம் குற்றமுடனுறவாடிக்கெடுக்க வேண்டா, மணிமிகுந்த மைமூனுக்குயிர் மணாளர் மணிமுத்தின் மஹ்மூதை வாழ்த்தாய் நெஞ்சே. 23

எள்ளளவும் புத்தியில்லாருறவ வேண்டா, மேற்றமுள்ள வாய்மைதனை யழிக்கவேண்டாம், கள்ளமனக் கோளருடன் கலக்க வேண்டாம், காசமுடனுபகாரக் கெடுதிவேண்டாம், உள்ளமதிற் பலநினைவுகொள்ள வேண்டாம், உடமை பலவலங்கரித்துத்திரிய வேண்டாம், வள்ளையேனுங் குழைமைமூ னுயிர்மணாளர் மணிமுத்தின் மஹ்மூதை வாழ்த்தாய் நெஞ்சே. 24

கன்றினுக்குப் பால்குறையக் கறக்கவேண்டாம், கையடைகள் வாங்கு தொழிற் செய்யவேண்டாம், மன்றினுள்ளே படுகிடங்கு தோண்டவேண்டாம், மனையாட்டி மனங்கோணநடக்கவேண்டாம், நின்றடிமைகளைக் கொடுமை செய்யவேண்டாம், நேர்ச்சையதைத் தனதென்று பறிக்கவேண்டாம், மன்றல் கமழ்மக்கநகர்கதிஜாபாங்கர் மணிமுத்தின் மஹ்மூதை வாழ்த்தாய் நெஞ்சே. 25

அயல்வீட்டிற் கண்டெடுத்த தொழுக்கவேண்டா, மவஞானன்
தனதென்று கொள்ளவேண்டாம், பயனுரிமை விட்டவனையாள
வேண்டாம், பஞ்சபாதகத்துறவுதேட வேண்டாம், செயலறிந்து
மறியார்போல் நடக்கவேண்டாம், செய் கூலிகண்டிருந்துங் குறைக்க
வேண்டாம், வயல்மதீனநகரும் மூசல்மாபாங்கர் மணிமுத்தின் மஹ்
மூதை வாழ்த்தாய் நெஞ்சே. 26

வழிகேடுகொண்டாரைவிலக்கவேண்டும், மரியாதைக்காரருட
னிணங்கவேண்டும். பழிபாவச் செயல்பேணி நடக்கவேண்டும்,
படிப்போருக்கன்ன முதல் கொடுக்கவேண்டும், விழியாரக்கண்ட
குற்றமறைக்க வேண்டும், விருந்தினருக் கன்புடனேபேணவேண்டும்,
மழலைமொழி கதிஜா தன்னுயிர்மணாளர் மணிமுத்தின்மஹ்மூதை
வாழ்த்தாய் நெஞ்சே. 27

பிள்ளைகளைத்தொழுவதற்குப் பயிற்றவேண்டும், பேதையரைத்
தன் சொல்லிலடக்கவேண்டும், எள்ளளவுடனீமானைப்பேண வேண்டு
மிருதயத்தினுதின முழுமிப்புவேண்டும், உள்ளசுகமத்தனைக்கும்
ஷுக்கூறுவேண்டும், உற்றதொழிற்செய்து கொண்டேயொழுக
வேண்டும், வள்ள லபூபக்கர்திருமருகரான மணிமுத்தின் மஹ்
மூதை வாழ்த்தாய் நெஞ்சே. 28

வணக்கத் துடனமர்ந்த மொழிபேசவேண்டும், மாட்டாதார்க்
குதவி யொடுநிற்கவேண்டும் இணக்கமோடெ வருடனும்பழக
வேண்டு, மெத்தீம்கள்முதலதனைச் சேர்க்கவேண்டும். கணக்
குடனே வாணிபத்தினிலைமைவேண்டும், கத்தனருள்வழியுதனைத்
தேடவேண்டும் மணங்குந்தியுமறுகத்தாப்மருகரான மணிமுத்தின்
மஹ்மூதைவாழ்த்தாய் நெஞ்சே. 29

கவலையுள்ள பேர்களுள்ளம் தேற்றவேண்டும் கடல் பூமி வந்
தாலும் உண்மை வேண்டும், எவர்களோடு மளவளப்பாயிருக்க
வேண்டுமெப்படியுங் கொடுத்தாரை நினைக்கவேண்டும், தவநிதமும்
பொருள் போல தேடவேண்டும், தக்கதுறுஞேதுபவர்க்குதவ
வேண்டும், மவுலியணியுதுமானுர் மாமனுனமணிமுத்தின் மஹ்மூ
தை வாழ்த்தாய் நெஞ்சே. 30

நல்வழியின் பார்வைதனைப் பேணவேண்டும், நாவதனைப் பிறர்
சபையிற் பேணவேண்டும், சொல் வரிசையாகிறத்தைத் தேட

வேண்டுஞ், சுகதுக்க மிரண்டி னுக்கும் புகழவேண்டும், வல்வினைகள் விலக்கிமதியுணர வேண்டும் வழிசறுகாசறகதனையெடுக்க வேண்டும், மல்வளரும்புயத்தலியார் மாமனுன மணிமுத்தின் மஹ்மூதை வாழ்த்தாய் நெஞ்சே. 31

அழகுசெறிய பூபக்கர்லப்பைதோன்ற, லதிகவிசுமாயிலப்பை மருகனுனேன். வழி யொழுகுமுஹிபித்தீன் கண்டுக்கன்பின், மைத்துனனும் பக்கீறு சாஹிபுள்ளம், பழகுநிறைபறிவு கொள்ள வுரைத்தவென்றி, படருஞ் சொர்க்க நீதிதன்னை யுணரவேண்டும். மழலைமொழியாயிஷா வுயிர் மணாளர், மணிமுத்தின் மஹ்மூதை வாழ்த்தாய் நெஞ்சே. 32

வேதவொலிமாறுதகாகிறாணில் விளங்கும் ரத்னப்பரிட்சை வணிகாதி நாதர் நீதமுறு மஹ்மூதுகபிணுஆலிம் நிதிமணியாம் ஹபீபு லெப்பை தோன்றலானேன், பேதையணிவெஷப்கபதுல் காதிறென்போன் பெருமையுடனுரைத்த சொர்க்கநீதியோதி, மாதவத்திணுயிஷாவுயிர் மணாளர் மணிமுத்தின் மஹ்மூதை வாழ்த்தாய் நெஞ்சே. 33

சொர்க்கநீதி—முற்றுப் பெற்றது.

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

இஃது-ஹச்சுபேரில்

அடைக்கல மாலை.

கட்டளைக் கலித்துறை.

மருவுரு வாகி மலருரு வாய்த்தினம் வாழ்த்துஞ் சிந்தைக்
கொருவுரு வாயொளி வுக்கொளி வாயுபி ருக்குயிராய்க்
கருவுரு வாயமை யாப்பொரு ளாய்த்திருக் காட்சிதரு
மருவுரு வாய்நின்ற மெய்ப்பொருளேயுன் னடைக்கலமே. 1

துவக்க முஹம்மது வேதாம்பர்க்கு மற்றத் தூதருக்கும்
உவக்கு மபூபக்கர் சித்தீக் குமறுது மானலியா
ரிவர்க்கு மிவர்கிளை யெல்லாருக் குமிசு லாமுஃமீ
னவர்க்கும் றஹ்மத்துச் செய்தருள் வாயுன் னடைக்கலமே. 2

மனத்தையும் காத்தென் சினத்தையும் காத்தென்னை வந்தடைந்தோர்
இனத்தையும் காத்தருளாண்டவனே யுன்னை யெண்ணினபேர்
சனத்தையும் காத்துபஹ்ஷறிலே சொர்க்கம் தந்திரட்சித்
தனத்தையும் காத்தருளல்லா வுன்பக்க லடைக்கலமே. 3

கல்லாத கல்வி பலகோடி கற்றுநின் கற்பனைக்கு
னில்லா தகல வலிமையுண் டோநித்த நம்பிறகு
லுல்லா ஷபாஅத்தி லீடேற்று வாய்மறை நாலுதவும்
அல்லா வுனைநம்பினே னுன் னடைக்கலமே. 4

விடியென் விடிந்தந்தி பட்டாலு மாசை விரகவெள்ளம்
வடியேனைக் காக்கக் கடனுனக் கேயுன்னை வாழ்த்தறியாக்
கொடியே னுனக்கு நபியிற சூற்கும்கொத் தோர்டுவிலை
யடியே னுனைநம்பி னேனம்பி னேனுன் னடைக்கலமே. 5

மிடிமைக்கு நெஞ்ச மிடையாமல் வாழ்வு மிகும்பொழுது
கொடுமைக்கு நெஞ்சம் துணிந்துநில் லாதுய்யக் கொண்டருளாய்
நெடிமைக் குடையிறசூல்பாத நித்த நித்த நம்பு
மடிமைக்கு நீதுணை அல்லாவுன்பக்க லடைக்கலமே. 6

நீளக் கடன்கொண்டடியேனின்பால்வந்து நின்று சும்மா
மீளக்கட னல்லவே யல்லவே வினை மேலடியார்
தாளக் கடனைத் தெல்லாம் பொறுத்துன் ஷபா அத்திலே
ஆளக் கடனுனக் கல்லா வுன்பக்க லடைக்கலமே. 7

தேனாலுங் கொண்டைபர் வாழ்வதி னாலும் தினங்கலியிற்
போனாலு மாவிபுதந்திறந் தராலுமென் புத்திபற்று
நானாலு கோடி பிழைகள்செய் தாலுமென் னட்டங்கள்வீ
ணானாலு நீதுணை அல்லா வுன்பக்க லடைக்கலமே. 8

வாக்கிலு நீயென் மனத்திலு நீயென் மனமயலிற
போக்கிலு நீகண் பொருந்திலு நீமனம் புண்படவே
தாக்கிலு நீயென் சடக்கிலு நீயருள் தந்துசொர்க்கத்
தாக்கிலு நீதுணை அல்லா வுன்பக்க லடைக்கலமே. 9

நடக்கிலு நீதுணை யென்னுயி ரோடி நடுநங்கிக்
கிடக்கிலு நீதுணை யப்பாற் கபனைக் கிழித்துச்சுற்றி
மடக்கிலு நீதுணை யெல்லோருங் கூடி மணலறையு
ளடக்கிலு நீதுணை அல்லா வுன்பக்க லடைக்கலமே. 10

கடங்கா தமரு மஹ்மூதி லேறிக் கஸ்தூரிபொன்னூ
ரிடங் காதம்வீச வருமிற சூலுக்கு மெவ்வுயிர்க்குந்
துடங்காத மற்ற நபிமா ரறிவுக்குந் தொன்மறைக்கு
மடங்காத மேலவ னேயடி யேனுன் னடைக்கலமே. 11

நாயேன் வணக்கஞ்செய் யேன்பெரி யோர்சீச்சி யென்றி கழு
நாயே னெவ்வா றுய்குவே னறியேன்வந்த நாண்முதலாய்த்
தாயே நகைக்கினு நீயே துணையென் றனக்குமுன்னின்
றூயே யெனது குதாயே யுன்க்க பலடைக்கலமே. 12

செறிந்தேன் விரகக் கடலுக்குட்பாவச் சுமைசுமந்து
முறிந்தேன் ரட்சித்து முன்னிற்பையே யுன்றன் மூதறிவால்
எறிந்தேன் கவலைக ளெல்லா முனையன்றி வேறிலையென்
றறிந்தேனுனையடைந் தேன் புகுந்தேனுன் னடைக்கலமே. 13

நோகரம லுள்ள நுடங்காம லுன்மறை நூல்தவறிப்
போகாம லாவி புழுங்காம லுனைப் பொழுதிலங்கம்
வேகாமன் மூளை வெடித்துருகாமல் வெந்நீரகி
லாகாமற் காத்தருள் அல்லா வுன்பக்க லடைக்கலமே. 14

சிறியேன்கி ருபைசெய் யேன்பெரி யோர்கண்முன் சென்றுநில்லா
வெறியே னுன்பால் வந்து மீண்டுநின்றே னுன்றன் வேதமன்றிக்
குறியே னபிக்குங் குறைகள்செய்யே னுன்றன் கொள்கையன்றி
யறியேன் வினையறி யேனடி யேனுன் னடைக்கலமே. 15

பாருந் துணைமுலை மாதரும் பொன்னும் பழிவினைவினை
யோருந் துணையென் றிருப்பதல்லா [illegible]பு சோடறுசிற்
சேருந் துணைப்பத நட்புமென் சிந்தைக்குஞ் சித்தமன்றி
யாருந் துணையில்லை அல்லா வுன்பக்க லடைக்கலமே. 16

நானே நினைத்ததுஞ் சொன்னதுஞ் செய்ததுநாளுமவம்
போனே னுன்பாதம் புகழ்ந்தறியே னென்றன் புத்தியென்னைத்
தானே நகைக்கி லுனக்காவ தெப்படித் தானென்றஞ்ச
லானே னுனைநம்பி னேனடி யேனுன் னடைக்கலமே. 17

காதாருங் கண்ணிய ராசையுண் மூழ்கும் கருத்தனையுன்
பாதார விந்தத்துக் காட்கொள்ளவை யேயெப் படியுமுன்றன்
தீதாறு காணச் சரண்புகும் பாவிக்குன் சித்தமன்றி
யாதாரம் வேறில்லை யல்லா வுன்பக்க லடைக்கலமே. 18

பூலோக முற்றும் புரக்கினும் பொன்மலை புக்கினும்வான்
மேலோக வாழ்வு லபிக்கினு மாமுன்றன் விருப்பமில்லாத்
தீலோகம் புக்கினுஞ் சற்றேயுன் சித்தம் திருப்பினபேர்க்
காலோக மொன்றில்லை யல்லா வுனபக்க லடைக்கலமே. 19

கொஞ்சிய. நெஞ்சக்கும் பேராசை வெள்ளம் குதித்தெழுந்து
மிஞ்சிய நெஞ்சுக்கு மேலோ ரிரவில் விழுத்தெழுந்து
கெஞ்சிய நெஞ்சுக்கு மென்போலப் பாவக்கிலேசத்தினு
லஞ்சிய நெஞ்சுக்கு நீயே துணையுன் னடைக்கலமே. 20

துயரிலு நீவங்கு முன்னிற்க வேண்டும் துன்பங்களன்றி
யுயரிலு நீவந்து முன்னிற்பை யேயுடல் விட்டுயிர்தான்
பெயரிலு நீவந்து முன்னிற்க வேண்டுமென் பேதைநெஞ்ச
மயரிலு நீவந்து முன்னிற்பை யானுன் னடைக்கலமே. 21

கலிமாத் தொழுகையும் சக்காத்து நோன்புடன் ஹஜ்ஜுஞ்செய்மு
ஸ்லிமா னவர்க ளுடனே றஹ்மத்துச செய்தருள்வாய்
புலிமான் புகழும ஹலிமா முலையுண்ட புண்யசிங்க
அலியாம னார்திரு வாணைபி னானுன னடைக்கலமே. 22

ஊரா ரிருந்தகல் லுற்றா ரிருந்து முறமுறைபின்
பேரா ரிருந்துமென் பெற்றா ரிருந்தும பிழைபொறுக்கக்
காரா ரிடுந்துடை வேதாம்ப ரனறிக கடாட்சம்வைக்க
ஆரா ரிருந்தும் பயனில்லை யானுன னடைக்கலமே. 23

பெருமையு மண்டும் தயவுஞ் சிங்காரமும் பேரறிவு
மொருமையும் பெற்ற நபியோர் பங்கினும் உம்மத்தென்றே
இருமையும் தேடிநின் றீமட்டறு வித்திடு மெங்கணபிக்
கருமையும் வாழ்வும் தரும் பொருளேயுன் னடைக்கலமே. 24

வாளாக் கியகண் மடமானும் வாழ்வும வரிசைகளும்
தேவளாக் கியமெய்யும் தந்தனை யேவினை யேனுளத்துள்
தாளாக்கி யென்றும் தியானஞ் செய்யாத்தறு கண்ணனைநின்
னாளாக்கி யாண்டருள் அல்லா வுன்பக்க லடைக்கலமே. 25

பொய்யோ தலைமரு ளோவிழி யோபுலை யோகளவோ
கையோ பழவினை யோசெவி யோகப டோவிருதா
மெய்யோ வவகடம் வாயோ துன்மார்க்கம் விதித்திருந்து
ஐயோ வெண்ணும லடைந்தே னுன்பக்க லடைக்கலமே. 26

நூறா யிரந்தாஞ் சொன்னாலும் காதி னுழைந்துசிந்தை
தேறாத பாவியைத் தேற்றுவையேயுன் றிருவுளத்தால்
மாறாத வல்வினை யெல்லா மகற்றி மனதில்வெப்பம்
ஆறாத பாவியை யாண்டருள வாயுன் னடைக்கலமே. 27

தொலையாத வல்வினை யெல்லாந் தொலைத்துத் தொழுதறியாய்
புலையா னனையெப் படிப்பொறுப்பா யென்றன் புத்தியெல்லா
மலையாம னின்று மறுகாம ஞானே மஹசறிலே
யலையாமற் காத்தருள் அல்லா வுன்பக்க லடைக்கலமே. 28

இடரான துன்பமு மின்பமுஞ் செய்தினைத் தேநரகிற்
றொடராமற் பாலத்திற் றாண்மட லாமற் சுவர்க்கம்புகப்
படரானது வந்தென சிந்தையுள்ளே பெரும் பாவவழி
அடராமற் காத்தருள் அல்லா வுன்பக்க லடைக்கலமே. 29

தேடிப் பிறருக் களியாத னுத்தன் றினமுமுனைப்
பாடித் துதித்தறி யாப்பெரு மூடனைப் பார்த்தருள்வாய்
கூடிக் கதிரிற் கிடைநின்று மூளை கொதிக்குமப்போ
தாடித் திரும்பி னலையாமல் யானுன் னடைக்கலமே. 30

கால னவிக்கு முயிர்செல்லு நாள்கலி மாவுதவி
வேல னவிக்குங் கசப்படாதுன் விருப்ப நல்காய்
கோல னவிக்குப் பிணைநின்று கோஜா முஹம்மதெங்கள்
ஆல நபிக்குமத் தானே னுன்பக்க லடைக்கலமே. 31

நீண்டருள் பாவக் கடலுக்குண் மூழ்கி நிலையுமிர்து
தாண்டருள் பாவிக்குன் றஞ்சமல் லாற்றா யேனையன்பான்
மீண்டருண் மீண்டரு ளெல்லா வினையும் விலக்கியென்னை
யாண்டரு ளாண்டவனே யுன் னடைக்கலமே. 32

வாடிய பூமங்கைக்கா ளாக் கினுமுயர் வானுலகம்
கூடிய மாதருக் காளாக்கினுங் கொடுந் தீநரகம்
காடிய வானவர்க் காளாக்கினு முன் கடாட்சமென்னை
யாடிய கோலத்துக் களாக்கினு முன் னடைக்கலமே. 33

கையம் புகுங்கண் மடவார்க ளாசைக்கு கவலைபுக்கு
மெய்யம் புகும் தளிர்க்கே விலையாகி விடுத்தனன்றோ
வையம் புகும் பொன்னுல கோர்நகைக்க மறுகிநெஞ்ச
மையம் புகாம லருள்புரி வாயுன் னடைக்கலமே. 34

குவ்வேழை வானக் குவடுக ளேழைக் குறுசறுசை
இவ்வேழ் கடலைப் படைத்த பிரானென் றிறைஞ்சிநில்லா
வெவ்வேளை மூதேவி யெல்லா நரகில் விழுந்தழுகும்
அவ்வேளை காத்தருள் அல்லா வுன்பக்க லடைக்கலமே. 35

சாம்வழி யுன்பதஞ் சாரா வழிவெந் தழனரகில்
வேம்வழி யுன்னை விரும்பா வழிவெய்ய பாலத்தின்மேல்
போம்வழி நின்று புகழ்ந்தோர் சுவர்க்கம் புகப்புகுத்து
மாம்வழி யால நபிவழி யானுன் னடைக்கலமே. 36

இருளுங் குழலிய ராசையி னெஞ்ச மிடைந்திடைந்து
மருளும் கொடியே னெவ் வாறுய்கு வெனிந்த மண்ணுலகில்
பொருளுங் கலையும் தருவது போலுன்றன் பொன்னுலகி
லருளும் கிருபையுந் தந்தருள் வாயுன் னடைக்கலமே. 37

பெரும்பா தகனைக் கொடியேனை யாசைப் பிரபஞ்சனைத்
தரும்பா தகனைத் தளர்பா தகனையென் றன்னையைய
வரும்பா தகனை மாபா தகனை மறைபயிலா
அரும்பா தகனை அடியேனை யாளுன் னடைக்கலமே. 38

படையாளு மால்விழி யார்கொங்கை மீறு பதனம்புக்கும்
தடையாள னென்றென்னைத் தள்ளாமற் சித்தஞ்சற் றேயிரங்கிக்
குடையாள ரெங்க ணபிநபி னார்தம் கொடிநிழலி
லடையாளந் தந்தென்னை யாண்டருள் வாயுன் னடைக்கலமே. 39

சபையம் பலப்புக்கு மேலோ ரறிவு தனைப்படியா
துபயம் புகுஞ்சிந்தைத் தூர்த்தனை யாமிற ருள்வழியி
னபயம் புகாத செவியேன் புகலிட மொன்றுமில்லா
அபய மபயமென் றன்பால் வந்தேனுன் னடைக்கலமே. 40

பொருடந்த வேதப் பொருளே யுன்பாதம் புகழ்ந்தறியா
மிருடந்த நெஞ்சிலுன் பேரொளி காட்டி மகவிருப்பு
மருடந்த கண்ணுற் றிருக்காட்சி காட்டி மறுமையிலும்
அருடந்த சொர்க்கமும் தந்தருள் வாயுன் னடைக்கலமே. 41

புலங்கா றறிவு கல்லா ரிசைப்போதும் புகழ்ந்தொளிவு
துலங்கா ருளத்திடை தோன்றுவ தோதொழு தோதுகினும்
கலங்கார் மறைவிலங் காரவ ராசைக் கருத்தினில்நிற்கும்
அலங்கார வேதப் பொருளே யுன்பாதந் தடைக்கலமே. 42

பொன்னையுந் தந்தனை யெல்லாம் நகைக்கப் புகைக்குஞ்சிந்தை
தன்னையும் தந்தனை யேவினையேனைச் சமப்படுத்து
மின்னையும் தந்தென்னை யென்தனை நீயெவ் விதஞ் செய்யினு
மன்னையும் தந்தையும் தெய்வமு நீயுன் னடைக்கலமே. 43

ஏவல் புகுந்தும் விலகலை நீக்கி யிகழ்ந்து முன்றன்
காவல் புகுந்தறி யாருப்ப ரோமலக் கல்பவுத்தாம்
சேவல் புகுந்தென் னுயிருண்ணு நாளுன் றிருப்புகழ்மே
லாவல் புகுந்த கருத்தருள் வாயுன் னடைக்கலமே. 44

மாலைக் கரும்பும் கமலம்கொய் தேகல்லை வாழ்த்திநின்று
பாலைக் கரும்பைப் படைத்தோர்க்குச் சொர்க்கப்பலனு முண்டோ
வேலைக் கரும்பது நல்குமுன் வேதவிதி நடந்தோர்க்
காலைக் கரும்பினுழலாமல் யானுன் னடைக்கலமே. 45

ஊரம் பலநப்பும் பொல்லார் நல்லார் சொல்லு முண்மை யெல்லாம்
காரம் பலப்புண்ணிற் பட்டதொப்பா மெனக் கருத்து மொரு
நேரம் பசைசுனா மாறனு மின்னை நினைப்பதல்லால்
ஆரம் பலாதிசொன் னாலும் விடேனுன் னடைக்கலமே. 46

மாக முழுதும் கடந்தறு ஷேறி வசனஞ் செய்து
மேக முழுதுங் குடையிட மீண்டருள் வேதநபி
பாக முழுதும் தெளிந்தோர்கள் பாதம் பணிந்தடியே
னாக முழுதிலும் நம்பினின் றேனுன் னடைக்கலமே. 47

இளைத்திடு மெய்யும் களைத்திடு நெஞ்சுமென் றைக்கும்வினை
யிளைத்திடும் பாவிக் கெவருண்டு காணாள் ளுடைந்துருகிக்
களைத்து நகைத்துக் கிடக்குமந் நாளுன் கடாட்சத்தினால்
அழைத்தெனை ரட்சிக்கு மல்லா வுனபக்க லடைக்கலமே. 48

நினைவோர்க்கு முன்னிற்கும் வேதாம்பர்பாதி நினைத்தருளைப்
புனைவோர்க்கு மார்க்கம்புகுந்துவந் தோர்க்கும் புகழுவர்மேல்
மனைவோர்க்கு முன்னுஞ் சலவாத்தை யோகி மனதினன்பு
பனைவோர்க்கு நீதுணை அல்லா வுனபக்க லடைக்கலமே. 49

கதுக்கான வேதம் படித்ததற் காகிலும் காசினியிற்
புதுக்கார் கனிகை நபிக்கா கிலுமுன [illegible]கு
மிதுக்கா கிலுமப்துல காதிறென் றேசியன்பா மேர்குறிக்கு
மதுக்கா கிலுமென்னை யாண்டருள் வாயுன் னடைக்கலமே. 50

அடைக்கலமாலை-முற்றிற்று.

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

எண்ணெய்ச் சிந்து.

காப்பு வெண்பா

நன்மை நெறிவளர நற்குரு முன்னிற்கவருள்
இன்மைவணு காம லெண்ணெச் சிந்துரைக்க-தன்மையுடன்
விண்டலமுமின்டலமும் வேண்டுமுயி ரும்படைத்துக்
கண்டறியும் வல்லவனே காப்பு.

கண்ணிகள்

சீராக வேந்தனெண்ணெய்ச் சிந்துகவி யான் பாடப்
பேராக வேயடங்கர்ப் பெரியோனே காத்தருள்வாய்

மங்கிலாமார்க்க வழியின் முறைப்படியே
பொங்கு மெண்ணெய்ச் சிந்துரைக்கப் புகழா ரிறைதுணையே

சிற்றெறும் புதான் கடையாய்ச் சிந்துரமு வற்றுள்ளது
முற்றுப் படைத்தளிக்கு முதலிறைய வன்றனையே

எண்ணெச்சிந் தென்றே மியப்பத் துளைபுரியும்
வண்ண மயில்வடிவார் வள்ளல் நபி றசூல்

கத்தன் திருத்தூதர் கதீஜா மணவாளர்
நித்த வறையுடைய நீதிநபி யைப்புகழ்வேன்

மக்கப் புரவலரை மதினமன்னர் மன்னவரை
மிக்கவளர் காரணரை வேதாம்பரைப் புகழ்வேன்

அண்ணலஹ்மதரை யர்லநபி ஷுயு ஹபீபை
விண்ணின் மணம்புரியும் விந்தைநபி யைப்புகழ்வேன்

மன்னரின் மன்னர்நபி மாருக்கு மாநபியை
நன்னயமு ஹம்மதுவை நந்நபியைத் தான்புகழ்வேன்

ஈரைம்ப தாயிரத்தி இருபத்துநா லாயிரம் பேர்
பார முறுசல்நபி பல்லோரை யான்புகழ்வேன்

நற்கனவு கண்டீமான் நபிபால் வுந்தேற்ற நய
சற்குண அபூபக்கர் தன்பாதம் போற்றி செய்வேன்.

நந்தியுடன் றேவதையு நவின்றதனர்ந் தையமுற்றுப்
புந்திமகிழ்ந் தீமான் பொருத்துமும தைப்புகழ்வேன்

முன்னு நபிவேத மொழியறிந்து நல்லீமான்
றன்னில் வருமுது மான் றன்பதத்தைப் போற்றிசெய்வேன்

வாழுஞ் சிறுவயதின் மகிழ்ந்து மணங் கொண்டீ மான்
வேழமெனப் பொருந்தும் வேங்கையலியைப் புகழ்வேன்

பட்டுடுத்திச் சொர்க்கப் பழமருந்தும் வீறுடையோர்
கட்டழகன ஹுசைனின் காற்கமலம் போற்றி செய்வேன்

மூவுலகும் போற்று முஹ்யித்தீனைப் புகழ்வேன்
ஷாஹுல்ஹமீதா மீரான் ஸாஹிபையும் போற்றிசெய்வேன்

கூறுமன் பியாக்களையும் குத்துபுமார்களையும்
தேறும் நா லிமாம்களையுஞ் சிந்தை மகிழ்ந் தேபுகழ் வேன்

நன்னபிதர் தோழர் நாற்பத்தீராயிரரைப்
பின்ன மறநித்தியமும் பெரிதாய்ப் புகழ்வேனே

நல்லோர் பெரியோரு ணாயனுவப் பானவரும்
வெல்லும் புகழ் பெருத்தோர் வேதியரையும் புகழ்வேன்

ஆகுமெண்ணெய்சிந்தென் றடி யேனுரைக்குந்தமிழ்
வாகுசெறி யும்புலவோர் வருந்தித் தள்ளிப்போடாமல்

நாத னுதவியினால் நானடியேன் பாடுகிறேன்
ஓதும் பிழையிருக்கி லோதிருத்தும் புலவீரே

எல்லோரையும் வாழ்த்தி யெண்ணெய்ச்சிந்து யானுரைக்க
வல்லோனே யென்றனது வன்பிழையை நீ பொறுப்பாய்

நூல்.

எங்கள் தமைப்புவியி லீன்றெடுத்த தாய்மாரே
மங்கிலெண்ணெய்ச் சிந்துரைக்க மறவாமற் கேட்டிருங்கள்
ஆசைமிகுந்திங்ஙனொரு வாண்புத்திரன் வேணுமென்று
நேசம் வைத் தெப்பொழுதும் நேர்ந்தே துவாவிரந்து
நித்தம் நித்தம் பள்ளிதோறும் நெய்யால் விளக்கெரித்துக்
கர்த்தனிடமக்க விரு கையேந்தி யேயிரந்து
கண்டேற்ற மானசிறு கான் முளையினாசை கொண்டு
மண்கூட்டும்பள்ளி யெல்லாம் வருந்தி நின்று பொன்கூட்டி
வேதியர்க்கு நற்றவத்து மேலோர்க்குத் தானதர்மம்
ஆதுலர்க்கும் வாரிநிதி யன்ன சொர்ண முங்கொடுத்து
சந்ததியின் வாஞ்சை கொண்டு தந்தையன்னை தானிரக்க
அர்த்தமுள்ள நற்கருணை யாண்டவன்றானே கொடுக்க
அன்புகொண் டன்னையுட னன்பாக மோகமதாய்
இன்பம் புரிந்தே ப்ரிதமாய்க்கருப்பமுற்றி

ஆகம் நடுங்கி யசைந்து கைகால் மேலுளைந்து
தேகம் பதறி மிகச் செப்பரிய வேர்வெழும்ப
வாலநுதற் பசந்து மண்புளிமேற் றுகமுண்டாய்
கோல வன்ன மேனிகொடிய பெருந்துயராய்

கால்கள் கடுத்துளைக் கண்டுக்கமுண்டாகி
மேல்கள் விருவிருத்து விறைத்துவெகு துன்பமதாய்
சந்து முளைந்துளைந்து தாபமில் லாதபடி
சொர்ந்து சொர்ந்து நூலிடைதான் நோய்வருத்த முண்டாகி

அங்க முளைந்தே யசைந்தசைந்து தள்ளாடிக்
கொங்கை முகங்கறுத்துக் கோவையிதழ் வாய்பசந்து
திங்களொன் றிரண்டு திருச்சதுவைந் தாறேழு
தங்குமட்ட முன்னவழும் தானகன்று போயினபின்

ஈரஞ்சு மாத மிசைவயிற்றி லேசுமந்து
பாரம் துயரத்தோடு பழியாண்டு நொந்துநொந்து
பத்துமா தஞ்சுமந்து பாடுதுன்பப்பட்டுளைந்து
புத்திரனைப் பெற்றீர் புரியுங்கரு மாரியுடன்

சீராட்டிப்பாராட்டி நேசமுட னேவாழ்த்த
வாராட்டுங் கொங்கை மங்கை மருத்துவப்பெண்டான் மகிழ்ந்து
வட்டி லடித்து வளமை பெறவே யெடுத்துப்
பட்டுஞ் சிவப்பாம் பசந்த வன்ன வாடையின் கண்

சீதேற்றித் தாலாட்டி விம்முமுலைப் பாலூட்டி
மாதா திருக்கரத்தால் மாமடியிலேசேர்த்து
எண்ணெய் தடவி யிருகண்ணிற்கு மையெழுதி
வண்ணமணி யாடையின் மேல் மைந்தன் றனை வளர்த்து

ஈயெறும்பு தீண்டாம லிரவு பகற் கண் விழித்து
காயமது நோய்கள் வாராக் காத்தவ்விடம் வீற்றிருந்து
இந்தப் படியே யிதையுதவி பால்வளர்ந்து
சிந்தனை யில்லாமற் சிறுமை யொன்றும் வாராமல்

பின்னை யிரக்கமனப் பிரியமுட னேயணைத்து
வெள்ளையெயி றிலங்க வெண்முறுவல் செய்துகொண்டு
சந்தோஷத் தோடு நெஞ்சிற் றன்சேர்த்து முத்தி யிட்டுப்
பிந்தாத நட்புடனே பேசும் வயதான பின்பு

செல்வம் தலை கொஞ்சச் சிந்தையெல்லாம் தான்குளிர்ந்து
புல்கி முத்தமிட்டு வந்து போற்றலுட னேவாழ்த்தி
நெஞ்சி லணைத்து நிலத்திற் றவழ்ந்தெழுந்து
இன்சொலடி வைத்தே யெழுந்துநின்று வீழ்ந்தபின்பு.

தாளுறைய நின்று தரையில் நடைபழகி
நாளுக்குநாள் வளர்ந்து நல்லமதி யுந்திருந்தி
வாழும் பருவக்கதைகள் வாகுபெறப் பேசம்மக்காள்
தோழர் சிறியர் சிலர் சூழவந்து கூடவேபின்

கையினிற் காப்புமிட்டுக் கண்டமதிற் காறையிட்டு
மெய்யிற் சட்டை யிட்டுப்பல விதமாகத் தூசணிந்து
நத்தும்வினை யாட்டுகளை நாட்டமற வோட்டிவிட்டுச்
சித்தமதிற் கல்விகளைத் தேர்ந்தறிய வேணுமென்று

உள்ள கலைகளதை யோதவே வைக்கவெனத்
தெள்ளுமனதிற் புதனுட் சிறப்பானது வெனவே
இயல்பெறும் பாரம்பண்ணி யெவ்வூருஞ் சுற்றாமல்
கயவருடன் கூடிக் கள்ளனாய்ப் போகாமல்

கீழ்மை கொண்ட பொய்கள் சொல்லிக்கெட்ட தொழிற் செய்யாமல்
வாழ்மாடு மேய்க்கும் மடவனென்றுஞ் சொல்லாமல்
காட்டுத்தொழிற் செய்யாமற் கண்டோர் நகைப்பாமல்
மோட்டுக்கலாசித் தொழில் முண்டி நின்று செய்யாமல்

சாலிச்சுமைந்து சண்டி யென்று சொல்லாமல்
கூலிக்கலையாமற் கோளனென்றுஞ் சொல்லாமல்
ஞானமறிவுடனே நல்லாக மந்தேர்ந்து
மானமுடனிருக்கில் மற்பேர் நகைப்பாரோ

கைப்பொருளும் பொய்யாகும் கல்விப்பொருள் மெய்யாகும்
மைப்படருங் கண்ணுரிய மாதே யென் மாதாவே
தெள்ளுங்குற ஆன்தமிழும் தேர்ந்தறிய வேணுமென்று
பிள்ளைகளைக் கூட்டிப் பிரயாசமாக நல்ல

கல்விகளைத் தேர்ந்தறியக் கற்றோரிட மனுப்பிச்
சொல்பிழை யில்லாத விதம் தொல்லை வளமைப்படிக்கு
பாக்குடனே வெற்றிலையும் பண்பான் சந்தனமும்
ஆக்கும் துத்தம் பாளிதமும் மான்மத லிக்கனியும்

பலபதார்த் தங்கள் பண்ணிகாரமுங் கூட்டி
நல்மலரும் பனிநீரு நாகரீக மாகவைத்து
ஏத்த பொன்னுங் கூட்டி யிருதடத்தின் மீதிருத்தி
வாழ்த்தி யிருக்கும் பள்ளிவாய லிடத்தனுப்பி

மூர்த்தி யறிந்துவர மோசமறக் கல்வியெல்லாம்
புந்தியில் வந்திடுக புதன்கிழமை யைக்குறித்து
ஆண்டுதிங்கள் பார்த்தே யதிகநல்ல நாட்பார்த்து
வேண்டுநல் முகூர்த்தமிது மெத்தநல்ல தென்றுவந்து

பேதங்கள் வாராமற் பின்னு நன்றாய்ச் சோதித்து
ஓதும் பெரியோர்களிட முற்றுணர்ந்து தான்கேட்டு
பஞ்சாங்கம் பார்த்து பலகித்தாபும் தான்பார்த்துத்
துஞ்சாதிது நினைவாய்த் தொன்முறையி லுள்ளபடி

வேதங்கள் கற்கவென்று மேலோர் புகழ்ந்திடவும்
தீதெங்குஞ் சேராமற் றினம்புறமை கற்கவுமே
தந்தை தாய் சித்தியமும் தாரார் மகிழவுமே
வந்தோர்கள் மெச்சிடவும் மாநிலமும் தான்புகழ

வேண்டுமென்றே யெம்மை விரும்பியே படிக்கவைத்தீர்
கூண்டபணம் தன்னிற் குறைய றத்கந் தெம்மைவிட்டீர்
இந்தமுறையாக யாவரும் தாமறியச்
சந்தமுள்ள பிள்ளை சிலர் தம்முடனே யென்னையுமே

எங்கண் மனசுவந்தே யோர்பெருக வேணு மென்று
சங்கையுட னெம்மைத் தவிராமல் வைத்தீரே
வைத்ததாய் மாரே வாழ்த்துறேன் கேட்டருளீர்
கைத்தலத்தி லீயுகின்ற காசுகுறை வானதினால்

நல்லறிவுகளை நட்புடனே கற்குகின்றான்
வல்லவுபாத்தி செய்யும் வஞ்சகத்தைக் கேளுமம்மா
ஆனவெரு மதிக ளதிகமா பியாமற்
பூனை வெலியதனைப் பொருவதுபோற் பண்ணுகிறார்

வல்லியத்தின் வேகமென்ன வாயுங்கண்ணு மம்படியாய்ச்
சொல்லிடவாயுமில்லை சொல்லுகிறேன்கேளுமம்மா
உற்ற கிழமைப்பன மொன்று கொண்டு போகாவிட்டாற்
பற்றுஞ் சுவடிதனிற்பாடமெழு தாமல் வைப்பார்

மாதந்தோறு மோரிறையாய் மரும மீயாவிட்டால்
நீதம்பிற கென்றுகண்கள் நெருப்புறச் சிந்திவையார்
சதலா லேது மொரு எடு தொடங்கிப் பிடிக்க
ஓதுமுன * மிறையா லொன்பது கொண்டு போகவேண்டும்

இப்படியே கொண்டேக வில்லாதிருந்தாக்காற்
தப்படிப் புன்மொழிகள் சாற்றிச்சிந் தேசுவர்காண்
சற்று முபாத்தியர்க்குச் சட்டம்பிபோல் லாததுட்டன்
சிற்றமுடன் காதைக்கிள்ளித் திருகியுநிறைக்கறுத்து

அர்த்துநின்று கன்னந்தனி லடிப்பா னிரக்க மில்லான்
பார்த்து முனிக்கிடுவான் படீரெனவோர் குட்டுவைப்பான்
சட்டம்பி முட்டிவைப்பான் சாலமகன் கோபங்கொண்டு
பட்டணத்து வாதிசெய்யும் பாதகத்தைக் கேளுமம்மா

சாட்டை யடியாலே தவறுபட வேயடிப்பார்
விட்டை விடாதபடி விண்மறிய லாய்மறிப்பார்
சற்றுமே ரஞ்சுணங்கித் காண்போகச் சம்பவித்தார்
ஊற்று வதன முருகச் சினந்துரைப்பார்

அத்தி மூம் மதத்தை யனயமதங் கொண்டெழுந்து
சித்த மிகச் சினந்து தீப்பொறிகள் பொற்பொறிவார்
மாதண்ட மென்னும் வலியமரந் தானுட்டிக்
கோதண்ட மானதிலே கொண்டு போய்த் தூக்கிடுவார்

கோதண்டந் தன்னிற் கொடுமாக்கி னவருத்தி
ஏதண்ட மாக எழுத்தாணி நாட்டிடுவார்
வெய்யல் முகம்பார்த்து வேர்வைமிக வுண்டாகக்
கையிற் சுவடி தந்து கடு மாக்கினையுரிந்து

நெற்றியதிற் கல்லைவைத்து நிட்டூரமாகப் பிணிந்து
பற்றி யிழுத்துப் பலவிதமாய்க் கஸ்திபண்ணி
குறித்த நெடும்பிரம்பால் கொல்லுவா ரெங்கள்குரு
அறுத்தகட்டைப் பிரம்பா லறும்படியே லடிப்பார்

---

* இறையென்பது இலங்கையில் வழங்கும் நாணயம்.
அது ருபாய்—3¼

ஆசையினு லெம்மை யன்பாகப் பெற்றெடுத்த
வாகபெறு மாதாவே மகிழ்வாகத் தந்தனுப்பும்
தந்தனுப்பா விட்டாலோ தாயேவருந் துயரம்
சொந்த பெற்றோர்க்கல்லாது நோவு பிறர்க்கு முண்டோ

சந்ததியைப் பெற்ற தாய்மா ரறிவதல்லால்
வந்ததை பெண்ணுங்கொடியே மலடியறிவாளா
இன்னுஞ் சற்றுநேர மிவ்விடத்தில் நின்றேமேல்
நன்மையுள்ளமாதாவே நாங்கள்படும் பாடுமிச்சம்

வெந்நீரில் மூழ்கினாற்போல் வேர்க்குதுகா ணங்கமெல்லாம்
இந்நேரந்தந்தனுப்பு மெங்கள் குருவின் பணத்தை
அஞ்ச தாத்தார்க்கிங் கள்ளி கூலிதன்னையிடுங்
வஞ்சனை செய்தாலே வழுவான சின்னமம்மா

வல்ல கல்விதான் வருத்தும் வாத்தியார் தங்கூலி
நல்லபணி பிரியு நாவிதர் கடங்கூலி
மெய்யின் பிணிதீர்க்கும் விறல் வயித்தியன்கூலி
செய்பதனில் வெளுக்குஞ் செய்வண்ணான் றன்கூலி

வன்றோச்சி முன்னு மருத்துவப் பெண்டன்கூலி
சொன்னேனிவைந்து வகை தொல்லுலகில் வைக்கவென்றே
இந்தவைந்து கூலிதன்னையெப் பேச்சும் பேசாமல்
முந்திக் கொடுக்கச் சொல்லி மூதுணர்ந்தோ ரோதினரே

ஓதும் படிக்கில் வுபாத்தியாயர் கூலிதன்னை
ஏதும் பகாராம லிப்போதிற் றாருமம்மா
செல்வர் தனம்பெருமை தினமுஞ்சத மாவதுண்டோ
கல்வி முறைப்பெருமை கண்டவிட மெங்குமம்மா

நட்புள்ள கல்விகற்றால் நட்டமென்றோ வெண்ணுகிறீர்
அன்பர் களுக்கறிவின் கரும்பலகைதான் கண்டீரோ
வாசமலர் மாலைமணம் வானரத்திற் கென்தெரியும்
காசின்மது மன்னவர்க்குங் கள்ளியர்க்குந் தான் தெரியும்

முத்து விலைபதுதான் முழுக்கள்ளர்க் கென் தெரியும்
வர்த்தகர் கண்டாலோ மதித்து விலை சொல்லுவார்கள்

ஓதுங்கல்வி காதேறி லுலுத்தார்க்குச் சுத்தமுண்டாம்
வேதங்கள் கற்றிடுவான் மேலவர்க்கும் வேண்டியதாம்
மன்னரிற் கற்றவர்கள் வாழ்சிறப்பின் மிக்கவர்காண்
தன்னரசு தான் செலுத்தத் தக்க பொருள் கல்வியம்மா
ஈதெலா மாய்துணர்ந் தெமக்குதவிசெய்யுமம்மா
நீ தயவு செய்யாவிட்டால் நித்தமடி பட்டுளைவோம்

பட்டாற் படுகுதென்று பங்கச் சொல்லோதாமல்
இட்டவழைத்துக் கிருபையுடன் றருமம்மா
தந்தாலுமக்குத் தவமிகுதி யுண்டாங்காண்
கொந்தார் குழலுநற் கோதைமதித் தாயாரே

வாடும் பயிர்க்கு மழை நீராய்த் தாருமம்மா
கூடிவந்த மைந்தர் குமாரர் பலர் கூடிநிற்க
மூத்துக் குமாரரெல்லாம் முன்றினுறும் வந்துநிற்க
சுத்தக் குமாரரெல்லாம் தொடர்வாயல் வந்துநிற்க

செல்வக் குமாரரெல்லாந் தெருவினிடம் வந்துநிற்க
அல்லக் குமாரரெல்லா மருகருகு வந்துநிற்க
பவளக் குமாரரெல்லாம் பந்தலின்கீழ் வந்துநிற்க
குவலயத்தி னேயமுள்ள கோலவண்ணத் தாயாரே

ஈதெல்லாங் கண்டி ரினிச் சணங்கக் கூடாதே
கோதில்லா மற்பணத்தைக் கூப்பிட்டுத்தந் தெம்மையிடும்
மாறுத தந்தனுப்பு மாதாவே நீர்வாழி
வீறுகத் தந்திடுவார் வீட்டிலுள்ளோ ரும்வாழி

எங்கு நிறைந்த விறை கிருபை தான்வாழி
புங்க மலக்குகளிற் புகழ்சிது வரும்வாழி
மற்று மலக்குகளும் வான்மாதரும்வாழி
முத்தி னொளிவான முஹம்மதுர் றசூல்வாழி

அபுபக்க ருமறுதுமா னலியசை னுசைன்வாழி
நபியாரும் மற்றும் நபிமா ருடன்வாழி
சான்றோர் முஹ்யித்தீனும் ஷாகுல்ஹமீதும் வாழி
என்ற வொலிமாரு மியல் குத்துபு மார்வாழி

ஆனசா தாத்துகளு மாலீம்க ளும்வாழி
தீனிலுள்ள வாணும்பெண்ணுஞ் செய்கையுடனேவாழி

பார்வாழி சீர்வாழி பஞ்சாட் சரம்வாழி
நேர்மறையாம் புறுக்கானி கழ்த்துங்குறு ஆன்வாழி
பாடினார் வாழி படிப்பித்தோர் தான்வாழி
ஏடு பிடித்தே யெழுதிவைத்தோர் தான்வாழி

எல்லோரும் வாழி யினியாளர் வாழியவே
வல்லோன் கிருபை வளர்ந்துவர வாழியவே
பூமியினிலுள்ள பொருள்வாழி வாழியவே
ஆமீனார் மைந்தாரல நபி வாழியவே

தீனபிக்குச் சொர்க்கமதிற் றிருக்கலி யாணம்வாழி
மானமுடன் தானவரும் வாழியாமீனாமீன்
ஆல்போல் தழைத்திங் கறுகதுபோல் வேரூன்றிப்
பூப்பா யரம்பையைப்போற் புடைசூழ வாழ்ந்திருப்பீர்

நீங்கில்லா மற்கடல்போல் நீடூழிவாழ்ந்திருப்பீர்
மூங்கிற் போற் கூடி முடியாமல் வாழ்ந்திருப்பீர்
வாழிவென்று கேட்போர்கள் வாழியாமீனாமீன்
தாழாமலெல்லோருந் தழைத்திடுக வேயாமீன்

எண்ணெய்ச் சிந்து முற்றிற்று.

Printed at Shahul Hameedia Press, Madras.

எங்களது சொந்த பிரசுரங்களுள் சில :—

தஸ்ஹுல் ஹாதீது வபத்ஹுல் மஜீது ரூ.	6	4	0
நபி நாயகத்தின் ஜீவிய சரித்திரம் ...	6	4	0
சீருபுராணம் பாட்டு	3	12	0
சீருபுராணம் மூலமும் உரையும் முதற்பாகம்	5	0	0
மஜ்மூஅ முஃஜிஸாதே றஸூல் ...	1	14	0
சீரத்துல் பாறூக்	2	8	0
பத்ஹுல் மிஸ்ர்	2	3	0
பைத்துல் முகத்திஸின் யுத்த சரித்திரம்	2	8	0
தரீக்குல் ஜன்னா.	3	0	0
தன்பீஹுஸ்ஸாலிஹீன்	1	8	0
பத்ஹுற் றஹ்மான் பில்பிக்ஹின் னுஃமான்	2	0	0
மஜ்மூஅ சூறத்துல் குர்ஆன் (முக்கியமான 40 சூராக்கள் தமிழிலும் அரபியிலும்)	2	8	0
மிஃருஜுல் ஆரிபீன் பீ தர்ஜுமதி மின்ஹாஜில் ஆபிதீன் ...	2	8	0
மிப்தாஹுஸ்ஸலாஹ்பீ யீலாஹின்னிகாஹ்	3	0	0
மிப்தாஹுஸ் ஸுபுஹானி பீ தர்ஜுமத்தி மஜ்மூஉஸ் ஸுல்தானி ...	1	14	0
ழுருருல் முஃமினீன் 1 முதல் 4-வது பாகம்	4	6	0
ஷை 5-வது பாகம் முதல் 8-வது பாகம்	4	6	0
ஷை 9-வது பாகம் முதல் 12-வது பாகம்	4	6	0
ஷை 1 முதல் 12 பாகம் வரை	12	4	0
கதீஜா நாயகி அவர்களின் ஜீவிய சரித்திரம்	1	4	0
பாத்திமா நாயகி அவர்களின் ஜீவிய சரித்திரம்	1	4	0
ஆயிஷா நாயகி அவர்களின் ஜீவிய சரித்திரம்	1	9	0
ஷை 3 நாயகிகளின் சரித்திரங்கள் சேர்த்து	3	12	0

கிடைக்குமிடம்:—

ஹாஜீ M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்,

நெ. 20. ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ்.